மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை:– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்,
முதன்மை சார்பு நீதிபதி

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீகுரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 20 ஆம் நாள்
2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ஆம் நாள் புதன்கிழமை

வழக்கிடை மனு எண்.03–2023
மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.81/2019

பால்ராஜ்,
த.பெ.சின்னகுஞ்சு. .....மனுதாரர்/மனுதாரர்

...எதிர்....

1. கந்தசாமி, த.பெ.மாரிமுத்து,
2. சத்தியமூர்த்தி, த.பெ. சாமிநாதன்,
3. கிளை மேலாளர்,
ஒரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,
கும்பகோணம். .....எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரீசீலனையிலிருந்து வந்து இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு 06.11.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. ஜெகதராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்து, எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களை பரீசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உத்தரவு**

இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் Under Order 9 Rule 9 of CPC & Section 169 of MV Act ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் பால்ராஜ், த.பெ.சின்னகுஞ்சு என்பவர் மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்டதற்கு நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்து, மேற்படி மனு விசாரணைக்காக கடந்த 27.10.2021 அன்று வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரரின் வழக்கறிஞர் இறந்துவிட்டதாலும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், உரிய தகவல் மனுதாரருக்கு சரிவர கிடைக்காததாலும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி மனுதாரர் தரப்பு விசாரணையினை ஆரம்பிக்க வில்லை என்றும், மேற்படி காரணங்களால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், எனவே தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கினை கோப்பில் எடுத்து ரெஸ்டோர் செய்து, அசல் மனுவினை விசாரணை செய்ய ரெஸ்டோரேசன் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவினை கோப்பில் எடுத்து விசாரணை செய்து அசல் வழக்கினை கோப்பில் எடுத்து விசாரிக்குமாறு இம்மனுவில் கோரியுள்ளார்.

மேற்படி மனு IA.NO.03/2023 ஆக 29.08.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்காக கடந்த 29.08.2023 முதல் வாய்தாவிற்கு வந்த நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 27.08.2024 அன்று தோன்றதரப்பினராக கருதப்பட்டனர்.

3. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இந்த மனு அனுமதிக்கப்பட்டதா என்பது மட்டுமே ?**

**4. தீர்வு :–**

மனுதாரர் பால்ராஜ், த.பெ.சின்னகுஞ்சு என்பவர் மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்டதற்கு நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்து, மேற்படி மனு விசாரணைக்காக கடந்த 27.10.2021 அன்று வாய்தா போடப்பட்டிருந்த நிலையில்

மனுதாரரின் வழக்கறிஞர் இறந்துவிட்டதாலும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், உரிய தகவல் மனுதாரருக்கு சரிவர கிடைக்காததாலும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி மனுதாரர் தரப்பு விசாரணையினை ஆரம்பிக்க வில்லை என்றும், மேற்படி காரணங்களால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கினை கோப்பில் எடுத்து ரெஸ்டோர் செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி மனுவை கோப்பிற்கு எடுப்பதில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பும் இல்லை. எனவே நீதியின்படியும் சட்டத்தின்படியும் மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பது உகந்ததாக அமையும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>5. முடிவில் :–</u>**

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–திருமதி.பி.சுதா),
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத்
தீர்ப்பாய நீதிபதி/ முதன்மை சார்பு நீதிபதி ,
மயிலாடுதுறை.

இருதரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் இல்லை.

(ஒம்/–திருமதி.பி.சுதா)
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத்
தீர்ப்பாய நீதிபதி/ முதன்மை சார்பு நீதிபதி ,
மயிலாடுதுறை.

Principal Sub-Court,
Mayiladuthurai,
Draft/Fair Order in I.A.No.03/2023 in
MCOP No.81/2019
date - 06.11.2024.